அரசாங்க சேவை ஆணைக்குழு

இணைப்பு 1

**தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்**

**இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) பதவிக்கு விண்ணப்பம் கோருவதற்கான அறிவித்தல்**

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தில் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) பதவிக்கு 01 வெற்றிடம் உள்ளதுடன், அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக தகைமையுள்ள தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 1 / தரம்I ஐ சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின்படி, 2019.09.12 அன்று வெளியிடப்பட்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 28/2019 இன் இணைப்பு 02 இன் படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பம், **2023.11.30** அன்று அல்லது அதற்கு முன் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கச் செய்ய வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உரையின் மேல் இடது மூலையில் **"இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்"** எனக் குறிக்கப்பட வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி**
**தொகை மதிப்பு புள்ளிவிபர பணிப்பாளர் நாயகம்,**
**இல.P 306/71,**
**பொல்துவ வீதி,**
**பத்தரமுல்லை**

03. 2017.12.22 ஆந் திகதிய 2050/43 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை பிரமாணக் குறிப்பின் படி அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தப்படும் தகைமைகளின் அடிப்படையில், அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) பதவிக்கு நியமனம் செய்யப்படும்.

**I. நேர்காணலில் புள்ளிவழங்கும் ஒழுங்கு கீழே காட்டப்பட்டுள்ளது.**

**புள்ளி வழங்கும் நடைமுறை**

| | **பரீட்சித்து புள்ளி வழங்கும் தலைப்புகள்** | **அதிகபட்ச புள்ளிகள்** |
|---|---|---|
| *01* | **சேவை அனுபவம் - 60** | |
| | I. பதவியுடன் சம்பந்தப்பட்ட தரத்தில் செயற்திறமான மற்றும் திருப்திகரமான சேவை காலத்திற்கு வருடமொன்றிற்கு 05 புள்ளிகளும் மற்றும் ஒரு வருடத்திற்கு குறைவான 06 மாதங்களுக்கும் மேற்பட்ட காலத்திற்கு 02 ½ புள்ளிகளும் வழங்கப்படும். 06 மாதங்களுக்கும் குறைவான சேவைக்கு புள்ளிகள் வழங்கப்படாது. | **50** |
| | II. நிறுவனத்தின் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத் தேவைக்கு (பிரதி/உதவி பணிப்பாளராக) தொடர்புடைய முன் அனுபவத்திற்கு (அதிகபட்சம் 05 ஆண்டுகளுக்கு) வருடமொன்றிற்கு 02 புள்ளிகள் வீதமும் 06 மாதங்களுக்கும் மேற்பட்ட காலத்திற்கு 01 புள்ளி வீதமும் வழங்கப்படும்.<br><br>06 மாதங்களுக்கும் குறைவான சேவைக்கு புள்ளிகள் வழங்கப்படாது. | **10** |
| 02 | **திறன்கள் - 40** | |
| | **I. கல்வித் தகைமைகள்**<br>உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் கருத்திற் கொள்ளப்படும் அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக, இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை பிரமாணக் குறிப்பில் உள்ள துறை வகைப்பாடு தொடர்பான அல்லது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள பதவி தொடர்பான கல்வித் தகைமைகள் மட்டுமே கவனத்திற் கொள்ளப்படும்.<br>அ.) பட்டப் பின்படிப்பு பட்டம் - புள்ளிகள் 15<br>ஆ.) பட்டப்பின்படிப்பு டிப்ளோமா - புள்ளிகள் 10<br>• பெற்றுக் கொண்டுள்ள உயர் தகைமைகளுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும். | **15** |

| | | |
|---|---|---|
| | ***II.*** **தொழில் தகைமைகள்**<br>***(அ) i.*** *தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத் துறையில் பெற்றுக்கொண்டுள்ள குறைந்தபட்சம் ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமோ பாடநெறிக்கு -* ***புள்ளிகள் 10*** *(உள்நாட்டு / வெளிநாட்டு)*<br>***ii.*** *அந்தத் துறையில் 06 மாதங்கள் அல்லது அதற்கு மேல் ஒரு வருடத்திற்கு குறைவான பாடநெறிக்கு* ***-புள்ளிகள் 05***<br><br>**(ஆ)** *நிறுவனத்தினால் தீர்மானிக்கப்படும் பதவி தொடர்பான துறையில் பூர்த்தி செய்துள்ள சர்வதேச அங்கீகாரம் பெற்ற தொழில்முறை சான்றிதழ்களுக்கு (Professional Certifications ), காலத்தைப் பொருட்படுத்தாமல், மேலே உள்ள 2 (II) (அ) (i) இன் கீழ் கவனத்திற் கொள்ளப்படும்.*<br><br>*உ-ம் 1) BCS/ACS*<br>*2) Microsoft Certifications*<br>*3) Sun Certifications*<br>*4) Cisco Certifications*<br>*5) CISSP Certifications*<br>*6) இது போன்றவை...* | ***10*** |
| | *III.* **விசேட பணிகள்/ பங்களிப்புகள்**<br>*தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் செய்யப்பட்ட புத்தாக்கங்கள், மேம்பாடுகள் மற்றும் சாதனைகள், வெகுமதிகள் மற்றும் பாராட்டுகளுக்கு இதன் கீழ் புள்ளிகள் வழங்கப்படுகின்றன.*<br><br>*(அ) புத்தாக்கங்கள், மேம்பாடுகள் மற்றும் சாதனைகள் அல்லது வெகுமதிகளுக்கு தலா 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 05 அம்சங்களுக்கு -* ***புள்ளிகள் 10***<br>*(ஆ) பொது 230ஆ படிவத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சின் செயலாளர்/நிறுவனத் தலைவரால் சான்றுப்படுத்தப்பட்ட 01 பாராட்டுதலுக்கு 01 புள்ளி வீதம் அதிகபட்சம் 05 பாராட்டுதல்களுக்கு மட்டுமே அதாவது அதிகபட்சம் 05 புள்ளிகள் மட்டுமே வழங்கப்படுவதுடன், பாராட்டுக்களுக்கு அதிகபட்சமாக 05 புள்ளிகளைப் பெற்ற பின்னர் விண்ணப்பதாரருக்கு மேலே III ( அ) இன் கீழ் குறிபிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு அத்தகைமைகளின் கீழ் வழங்கப்படும் எஞ்சிய 05 புள்ளிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.*<br>**மேலே *III* (அ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளின் உதாரணங்கள்**<br>*1) மென்பொருள் உருவாக்கம்/ அபிவிருத்தி (Software Designing / Development)*<br>*2) வலையமைப்பு நிர்வாகம் (Network Administration)*<br>*3) முறைமை நிர்வாகம் (Network Administration)*<br>*4) தரவுத் தள நிர்வாகம் (Data Base Administration)*<br>*5) பொது தகவல், தொடர்பாடல் தொழிநுட்ப நடவடிக்கைகள் மற்றும் ஏனையவை.(General ICT Tasks & etc.)*<br>**குறிப்பு.**<br>❖ *புத்தாக்கங்கள் மற்றும் மேம்பாடுகள் விண்ணப்பதாரரால் செய்யப்பட்டவை என்று நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.*<br>❖ *விண்ணப்பதாரர்கள் வெகுமதிகள் மற்றும் சாதனைகள் பெற்றிருப்பதற்கான முறையான சான்றிதழ்களை சமர்ப்பிக்க வேண்டும்.* | ***10*** |

| | | |
|---|---|---|
| | ***IV.*** **நேர்முகப்பரீட்சையின் போது வெளிப்படுத்தப்படும் திறமைகள்**<br>அ.) தலைமைத்துவம் - புள்ளிகள் 02<br>ஆ.) தொடர்பாடல் திறன்கள் - புள்ளிகள் 02<br>இ) தொழில்சார் ஒழுக்கங்கள் - புள்ளிகள் 01 | *05* |

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவு படி, திகதி: 2023/11/10

தொகை மதிப்பு, புள்ளிவிபர பணிப்பாளர் நாயகம்,

P.M.P. Anura Kumara
Director General
Department of Census & Statistics
" Sankyana Mandiraya"
No. 306/71, Polduwa Road, Battaramulla.


முகவரி: தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்
இல.P 306/71,
பொல்து வீதி,
பத்தரமுல்லை

தொலைபேசி இலக்கம் - 011 - 2147001
தொலைநகல் இலக்கம் - 011 - 2147011
மின்னஞ்சல் - anurakumara@statistics.gov.lk